**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் நாள் புதன்கிழமை

**<u>இடைநிலை மனு எண்.1/2023-ன் அசல் வழக்கு எண்.272/2015</u>**

சுரேஷ் ..மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பக்தவச்சலம்
2. பரந்தாமன்
3. கிருஷ்ணன்
4. நாகன்
5. வட்டாட்சியர், செய்யாறு.
6. கோட்டாட்சியர், செய்யாறு.
7. மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை.
8. சார்பதிவாளர், தூசி.
9. மாவட்ட பதிவாளர், செய்யாறு. .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 06.03.2023 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.P. சரவணன், அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.S. சங்கரபாண்டியன், அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதத்தைக் கேட்டறிந்தும், கோப்புகளை பரிசீலனை செய்தும் இன்று, இதுகுறித்து இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் 76 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுவில் கண்டுள்ள ஆவணங்களை 8ம் பிரதிவாதி தூசி சார்பதிவாளர் அவர்களும், 9ம் பிரதிவாதியான மாவட்ட பதிவாளர் அவர்களும் நீதிமன்றத்தில் தருவிக்க (sendfor) தக்க உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுவின் சுருக்கம்.</u>**

(i). மனுதாரர் இவ்வழக்கில் வாதி, தாவா சொத்துக்கள் தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரியும் நிரந்தர தடையுத்தரவு கோரியும் ஆவண எண் 784/2003 செல்லத்தக்கது அல்ல என விளம்புகை கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்கள் குறித்து தவறுதலான கிரைய ஆவணத்தினை 3,4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்திக் கொடுத்ததாகவும், இது குறித்து மாவட்ட பதிவாளரான 9ம் பிரதிவாதி அலுவலகத்தில் புகார் கொடுத்து விசாரணை செய்ததாகவும், 9ம் பிரதிவாதி விசாரணை செய்த நகலையும், அதனால் காணப்பட்ட தீர்வின் நகலையும், 9ம் பிரதிவாதியான செய்யாறு மாவட்ட பதிவாளரும், தாவா சொத்து குறித்து 8ம் பிரதிவாதி பதிவு செய்தபோது 1,3,4 பிரதிவாதிகளிடத்தில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களையும், எந்த ஆவணத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்பதற்கான ஆவணங்களை, 8ம் பிரதிவாதியான தூசி சார் பதிவாளர் நீதிமன்றத்தில் தருவிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 22.9.2014ம் தேதியன்று கொடுத்த புகார் வாதி 9ம் பிரதிவாதி அலுவலகத்தில் கொடுத்த புகார் 1,3,4 பிரதிவாதிகளை விசாரணை செய்து பெறப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள், 13.10.2014 தேதியன்று வாதி கொடுத்த புகாருக்கு 9ம் பிரதிவாதி, வாதியையும், 1,3,4 பிரதிவாதிகளையும் விசாரணை செய்து பெறப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள், 9ம் பிரதிவாதி கண்ட தீர்வின் நகல், 10.09.2003 தேதியிட்ட தாவா சொத்து குறித்த 3,4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்திக்கொள்ள கிரைய ஆவண எண் 784/2003 என்ற ஆவணம் ஏற்பட்ட சமயத்தில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்பதற்கான ஆவணங்களையும், ஆவணம் பதிவு செய்யப்பட்ட சமயத்தில் 1,3,4 பிரதிவாதிகளிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களையும், 8ம் பிரதிவாதியான தூசி சார் பதிவாளர், 9ம் பிரதிவாதி மாவட்ட பதிவாளர், நீதிமன்றத்தில் தருவிக்க வேண்டி இம்மனு தாக்கல்.

3. **<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>**

மனு நிலைக்கத்தக்கதல்ல. 3,4 பிரதிவாதிகள் பெயருக்கு எதிர்மனுதாரர் ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணத்தின் நகலை மனுதாரர் நேரடியாக சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று

தாக்கல் செய்யலாம். இதர ஆவணங்கள் குறித்து மாவட்ட பதிவாளர் ஏற்கனவே இருதரப்பினரையும் விசாரணை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்த உத்தரவில் நீதிமன்றத்தின் மூலமாக உரிய பரிகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியது என்றும் மாவட்ட பதிவாளர் அந்த புகார் மனுவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று உத்தரவு பிறப்பித்தார், அந்த உத்தரவின் நகல் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுவிட்டது. விசாரணை முடிக்கப் பட்ட பின்னரும் மனுதாரர் வேண்டுமென்றே காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தரப்பில் வட்டாட்சியர் தரப்பில் விசாரணை செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு உரிய விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் இந்த மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல, எனவே இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தற்பொழுது தீர்மானம் செய்யவேண்டியது மனுதாரர்களின் மனு, அனுமதிக்கப்படக்கூடியதா? என்பதே ஆகும்.

5) இம்மனுவில், இருதரப்பிலும் சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர்/வாதி வட்டாட்சியர் செய்யாறு, மாவட்ட சார் பதிவாளர் செய்யார் ஆகியோர்களிடம் இவ்வழக்கு மனுதாரர்/ வாதி கொடுத்த புகாரும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளான பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் அந்த புகாரின் மீதான உத்தரவு குறித்த ஆவணங்களையும், எதன் அடிப்படையில் ஆவண எண் 784/2003 பதிவு செய்யப்பட்டது என்பதற்கான ஆவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த ஆவணங்கள் மனுதாரர்/ வாதி தனது தரப்பை நிரூபணம் செய்ய தேவைப்படும் முக்கிய ஆவணங்கள் என்றும், எனவே இந்த மனுவினை அனுமதிக்குமாறும் வாதிட்டார்.

7) எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர்கள் கோரும் ஆவணங்கள் குறித்து மனுதாரருக்கு ஏற்கனவே மாவட்ட பதிவாளர், செய்யாறு அவர்கள் நகல் அளித்திருப்பதாகவும், மேலும் மனுதாரர் கோரும் விசாரணை ஆவணங்கள் இவ்வழக்கிற்கு அவசியமற்ற ஆவணங்கள் என்றும், ஏற்கனவே மனுதாரர் வட்டாட்சியரை விசாரிக்க மனுதாக்கல் செய்து அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு விசாரணையை காலம் தாழ்த்தவே மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

8) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. கோப்புகள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

9) <u>தீர்வு</u>

மனுதாரர் தரப்பில் தூசி சார் பதிவாளர் மற்றும் செய்யாறு மாவட்ட பதிவாளர் ஆகியோர்கள் தாவா சொத்து சம்மந்தமாக நடத்திய விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் தீர்வு ஆகிய ஆவணங்களும் மனுதாரர் தரப்பில் இல்லா நிலையது என விளம்புகை கோரியுள்ள ஆவணம் எதன் அடிப்படையில் பதிவாளரால் பதிவு செய்யப்பட்டது என்பது குறித்த ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தருவிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கை காலதாமதப்படுத்த மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்படுவதாகவும், எனவே மனுவை செலவுத் தொகையோடு இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறும் வாதிடப்பட்டது.

10. மேற்படி மாவட்ட பதிவாளர் மேற்கொண்ட விசாரணை இவ்வழக்கு விசாரணைக்கு அவசியமற்றது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் பதிவுச் சட்டம் 1908 பிரிவு 86 மற்றும் 87ன் படி பதிவாளர் நல்ல எண்ணத்தோடு செய்யும் எத்தகைய செயலும் வழக்கில் பொறுப்புடையோர் ஆகமாட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்திய பதிவுச் சட்டம் 1908ல் பிரிவு 86ல் கீழ்க்கண்வாறு கூறப்பட்டுள்ளது. "பிரிவு 86. பதிவு செய்யும் அதிகாரி தனது உத்தியோக பூர்வ தகுதியில் நேர்மையாக செய்த அல்லது மறுத்த காரியத்திற்கு பொறுப்பல்ல. எந்தவொரு வழக்கு, கோரிக்கை அல்லது கோரிக்கைக்கு எந்த ஒரு பதிவு அதிகாரியும் பொறுப்பேற்க மாட்டார்கள்". மேலும் பதிவாளர் துறை ரீதியாக நடத்தும் விசாரணை குறித்து தற்போது நிலுவையில் உள்ள இவ்வழக்கிற்கு

எவ்வகையில் அவசியமானது என்பது குறித்து மனுதாரர் தரப்பில் எவ்வித விளக்கமும் இல்லை. மேலும் மனுதாரர் சான்றாவணங்கள் வாயிலாகவே தன்னுடைய வழக்கை நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். எனவே மனுதாரர் கோருவது போல் மாவட்ட பதிவாளர் விசாரணையானது மனுதாரர் கூறும் சங்கதிகள் மூலம் இவ்வழக்கு விசாரணைக்கு தேவையற்றது என்று இந்நீதிமன்றம் கட்டளை 16 விதி 1(எ)ன் கீழ் வட்டாட்சியரை விசாரிக்க மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு விசாரணைக்கு பின்னர் ஏற்கனவே இடைமனு எண் 1/2022ல் தீர்வு கண்டு அம்மனுவினை 23.12.2022ல் தள்ளுபடி செய்துள்ளது. மீண்டும் மனுதாரர் அதே சங்கதிகளை குறித்து கூறி தள்ளுபடி செய்யப்பட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தருவிக்க தற்போது இம்மனு தாக்கல் செய்துள்ளது புலப்படுகிறது.

11. மேலும் மனுதாரர்/வாதி ஏற்கனவே நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட மனுவில் கூறியுள்ள சங்கதிகள் குறித்து மீண்டும் வேறு விதமான சட்டப்பிரிவில் இம்மனு தாக்கல் செய்துள்ளது புலப்படுகிறது. மனுதாரர்/வாதி தருவிக்க கோரும் ஆவணங்கள் இவ்வழக்கு விசாரணைக்கு தேவையற்ற ஆவணங்கள். மேலும் அந்த ஆவணங்கள் வாயிலாக வழக்கிற்கு தேவையான சங்கதிகள் எதுவும் பெற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் 8 மற்றும் 9ம் எதிர்மனுதாரர்கள் துறை ரீதியாக நடத்தியுள்ள விசாரணை குறித்து நீதிமன்றங்கள் விளக்கம் கோர இயலாது என்று இந்திய பதிவுச் சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மேலும் மனுதாரர் தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்து நீதிமன்ற நேரத்தினையும், எதிர்மனுதாரர்களையும் அலைகழிப்பதாக 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்படும் சங்கதி ஏற்புடையதாக உள்ளது. எனவே 1,2 எதிர்மனுதாரர்களுக்கு இம்மனுவின் மனுதாரர் ரூ.500/- செலவுத் தொகையாக செலுத்த கடமைப்பட்டவராகிறார் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனுவின் மனுதாரர் 1,2 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/- செலுத்த வேண்டும் என்ற உத்தரவோடு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு

பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :-

-இல்லை-

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :-

-இல்லை-

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.